**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC. No. 44/2008**

Prosecution witness : **4**

| | | | |
|---|---|---|---|
| Name: | கே.தங்கவேல் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused produced

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **04.12.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது காவல் துறை துணை கண்காணிப்பளராக பணியில் இருந்து ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2007ம் ஆண்டு தேனி NIB CIDல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். 6.07.2007ம் ஆண்டு பணியில் இருந்தபோது சுமார் 18.30 மணியளவில் தேனி NIB CID உதவி ஆய்வாளர் திரு.எஸ்.ஆர்.ஜி.தயாளன் அவர்கள் என்னிடம் கொடுத்த 57 NDPS Actபடி அறிக்கை பெற்றுக்கொண்டு இவ்வழக்கை மேல்

விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் 1.சென்ட்ராயன், 2.தலைமைக் காவலர் ஜெயக்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் எஸ்.ஆர்.ஜி.தயாளன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் இவ்வழக்கின் எதிரிகளை விசாரணை செய்து நடந்த சம்பவங்கள் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகள் 1.பழனியப்பன், 2.அழகேசன், 3.அருள், 4.தியாகராஜன், 5.கந்தசாமி ஆகியோர்களையும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் மற்றும் எஸ்.ஐ. தயார் செய்த படிவம் 91 ஆகியவைகளையும் கனம் நீதிமன்றம் மூலமாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்பு 25.07.2007 ம் தேதியன்று இவ்வழக்கின் சொத்துக்களை கனம் நீதிமன்றம் மூலமாக சென்னை போதைப்பொருள் பகுப்பாய்வு மையத்திற்கு தலைமைக் காவலர் கணேசன் மூலமாக அனுப்பி வைத்தேன். மேலும் இது சம்மந்தமாக சாட்சிகள் திரு.கணேசன், தலைமைக் காவலர், மற்றும் சிறப்பு நீதிமன்றம் தலைமை எழுத்தர் பி.கே.சச்சிதானந்தம், NDPS Court அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை பகுப்பாய்வு செய்த அறிக்கை பெற்றேன். இது சம்மந்தமாக திருமதி.சோபிகா பகுப்பாய்வினர், உதவி ஆய்வாளர் நிலை2 அறிவியல் துறை, சென்னை ஆகியவர்களை 15.10.2007ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் என்னுடைய விசாரணை முடித்து மேற்படி எதிரிகள் மீது சட்டப்பிரிவு 8(c) r/w 18(c) of NDPS Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். படிவம் 91 அ.சா.ஆ.24, அ.சா.ஆ.25 (எதிரி தரப்பில் படிவம் 91ல் விசாரணை அதிகாரி கையொப்பம் செய்யவில்லை என்பதால் அதை குறியீடு செய்ய ஆட்சேபிப்பதாக எழுப்பப்பட்ட ஆட்சேபணையின் பேரில் இது குறியீடு செய்யப்பட்டது).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். இவ்வழக்கில் தயார் செய்யப்பட்ட முதல் ஆவணமான சோதனை சம்மதக் கடிதத்தில் எதிரிகளின் வரிசை எண் கொடுக்கப்பட்டுள்ளது பொதுவாக எதிரிகளின் வரிசை எண்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின் தான் வழங்கப்படும் என்றால் சரிதான். அருள் என்ற எதிரிக்கான சோதனை சம்மதக் கடிதத்தில் தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எல்லா எதிரிகளுக்கான சோதனை சம்மதக் கடிதம் மற்றும் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்லப்படும் சாட்சிகளின் விசாரணை வாக்குமூலத்தில் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்போ சோதனை செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது சட்டபபடியான உரிமம் எதிரிகளுக்கு உள்ளது என்பதை அதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 5 எதிரிகளுக்கான ஆய்வு நமூனாவில் அது தயார் செய்யப்பட்ட நேரமானது வெள்ளை மை அழிப்பான் வைத்து திருத்தம் செய்யப்பட்டு வேறு நேரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அனைத்து ஆய்வு நமூனாக்களிலும் நேரமானது திருத்தப் பட்டுள்ளது என்றும் நான் வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சென்ட்ராயன் என்ற தனி நபர் சாட்சி சம்பவ நடந்த இடத்தைச் சேர்ந்தவர் இல்லை என்றால் சரியல்ல. அவர் கடமலைக்குண்டு பாலூத்து கிராமத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான்.

அவர் காவல்நிலைய கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. சார்பாய்வாளர் என்னிடம் வந்து சமர்ப்பித்த உத்தரவின் கீழ் நான் வழக்கு சொத்துக்களையும் எதிரிகளையும் பெற்றதாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் விரிவான அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தவிர வேறு எதிலும் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் பகுப்பாய்வுக்கான காவல் நிலைய வேண்டுகோள் கடிதத்தில் ஆய்வகத்திற்கு கொண்டு செல்லும் காவலர் பெயர் திருத்தம் செய்து அந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வகத்தில் கொண்டு சென்று பகுப்பாய்வுகளுக்கு பொருள்களை ஒப்படைக்கும்போது அந்த ஆய்வகத்தில் இருந்து பொருட்களை பெற்றுக் கொண்டு ஒரு இரசீது கொடுக்கப்படும் என்றால் நீதிமன்றத்திற்கு கொடுக்கப்படும். அந்த இரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பகுப்பாய்வகத்திற்கு எடுத்துச் சென்ற காவலரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பகுப்பாய்வுக்கான வேண்டுகோள் கடிதத்தில் என்னுடைய காவல்நிலைய மாதிரி முத்திரை எதுவும் பதிக்கவில்லை என்றால் சரிதான்.

பகுப்பாய்வகத்திற்கு காவல்நிலைய மாதிரி முத்திரை பதித்து அனுப்பினால் மட்டுமே ஆய்வகத்தில் மாதிரி பொட்டலங்களின் மீது காவல் நிலைய மாதிரி முத்திரை இருந்ததா என ஒப்பீடு செய்யப்படும் என்றால் சரிதான். ஆய்வுக்கு பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையில் பொட்டலங்களின் எடை குறைந்து காணப்படுகிறது என்றால் சரிதான். ஆய்வுக்குப் பெறப்பட்ட மாதிரிப் பொட்டலங்களின் மீது எதிரிகளின் பெயரும் சாட்சிகளின் பெயரும் இருந்ததாக ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போதைப் பொருளுடைய சதவீதம் என்னவென்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பகுப்பாய்வு அறிக்கயானது முழுமையான விவரங்கள் அடங்கிய பகுப்பாய்வு அறிக்கை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட வழக்கின் சொத்துக்களுக்கும் இந்த எதிரிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றால் சரியல்ல. தியாகராஜன், கந்தசாமி என்ற எதிரிகளுக்கும் இந்த வழக்கின் மற்ற எதிரிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை எவ்வித ஆதாரமும் இன்றி காவல் நிலையத்தில் போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக இறுதி அறிக்கை தாக்கல்

செய்து அதனை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சொத்துக்களுக்கும் இந்த எதிரிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் போதைப் பொருள் விதிகள் சரியான பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.